


தென்காசி மாவட்டம் சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.கலை கதிரவன் (தென்காசி) ஈ.ராஜா வாசுதேவநல்லூர் தி.மு.இராசேந்திரன் கடையநல்லூர் ஆகியோர் கூட்டாக இணைந்து தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோரை நேரில் சந்தித்து பழைய குற்றாலம் அருவியில் நுழைவு கட்டணம் அமல்படுத்த வேண்டாம் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மனு கொடுத்தனர்.



விருதாச்சலம் நகர முன்னாள் துணைச் செயலாளர் கழக முன்னோடி துரை வாசுதேவன் திருவுருவப் படத்தை கழகத்தின் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி திறந்து வைத்தார். உடன் மாவட்ட கழக செயலாளர் சி.வி.கணேசன் எம்.எல்.ஏ., சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், பொதுக்குழு உறுப்பினர் முகலிவாக்கம் பாஸ்கர், ஒன்றிய கழகச் செயலாளர் வேல்முருகன் மற்றும் ராமு உடன் இருந்தனர்.

### செங்கல்பட்டு – ஓர்க்காட்பேட்டை – ஆத்தூர்

# பாலாற்று மேம்பாலத்தில் விபத்தை ஏற்படுத்தும் மண் குவியல்!

## அகற்ற நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை!

செங்கல்பட்டு, மே 30 – பழத்தோட்டம் ஓர்க்காட் பேட்டை மேம்பாலத்தில் விபத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ள மண் குவியல்களை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது. ஓர்க்காட்பேட்டை– ஆத்தூர் பழத்தோட்டம் இடையே கடந்த 30 வருடங்களுக்கு முன்பு பாலாற்றின் குறுக்கே கிராவல் சாலை அமைக்கப்பட்டு இருந்தது.

இந்த சாலை வழியாக ஓர்க்காட் பேட்டை, காவி தண்டலம், காவூர், விச்சூர், திருவானைக்கோயில், பினாயூர், மாம்பாக்கம், சித்தன காவூர், பழவேரி, பேரணக்காவூர், சாத்தனஞ்சேரி, சீதனஞ்சேரி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்கள் செங்கல்பட்டு பகுதிக்கு பல்வேறு வேலைகளுக்காக வந்து சென்று கொண்டிருந்தனர்.

அவ்வப்போது பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இந்த சாலை முழுவதுமாக துண்டிக்கப்படும். இதனால் ஓர்க்காட் பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பொதுமக்கள் செங்கல்பட்டுக்கு 25 கிலோ மீட்டர் சுற்றிக் கொண்டு வருவது வழக்கம். இந்த நிலையில் பொதுமக்கள் வைத்த கோரிக்கையின் பேரில் கடந்த 15 வருடங்களுக்கு முன்பு நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.25 கோடியில் ஓர்க்காட்பேட்டைஆத்தூர் இடையே பாலாற்று மேம்பாலம் கட்டப்பட்டது.

இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் சிரமமின்றி செங்கல்பட்டு பகுதிக்கும், செங்கல்பட்டில் இருந்து ரயில் மூலம் சென்னை போன்ற பகுதிகளுக்கும் சென்று வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு ஓர்க்காட் பேட்டை, மையூர், பிலாப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏரி மண் டெண்டர் விடப்பட்டதால் அளவுக்கு அதிகமான ஏரி மணல் ஏற்றிக் கொண்டு கனரக லாரிகள் இந்த பாலத்தை பயன்படுத்திச் செல்கின்றன.

இதனால் உபரியான ஏரி மண் பாலத்தில் கொட்டி பாலத்தின் இரு புறங்களிலும் மண் குவியலாக மாறி உள்ளது. பாலத்தில் உள்ள மழைநீர் வெளியேறும் குழாய்களை ஏரி மண் அடைத்து விடுவதால் அவ்வப்போது பெய்யும் மழையால் தேங்கும் மழை நீர் கீழே செல்ல முடியாமல் பாலத்திலேயே தேங்கி நிற்கிறது.

மண் குயிலோடு சேர்ந்து மழை நீரும் வடியாமல் பாலத்தின் மீது தேங்குவதால் இரவு நேரங்களில் பாலத்தை கடக்கும் பொதுமக்கள் சேறும், சகதியிலும் சிக்கி கீழே விழுந்து காயமடைந்து விபத்து அதிகரிக்கும் நிலை ஏற்படுகிறது.

எனவே மேம்பாலத்தின் மேல் குவிந்துள்ள மண்குவியல்களை அகற்றி மழைநீர் வடிவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும், வெயில் நேரங்களில் பாலத்தின் மீதுள்ள மண் குவியல்கள் வாகனங்கள் செல்லும்போது காற்றில் தூசியாக மாறி வாகன ஓட்டிகளின் கண்களில் படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அளவுக்கு அதிகமாக லாரிகளில் மண் எடுத்துச் செல்வத்தை தடுக்க வேண்டும், மேம்பாலத்தில் குவிந்துள்ள மண் குவியல்களை அகற்ற வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# அரியலூர் மாவட்டப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர் எம்.எல்.ஏ. அறிக்கை!



அரியலூர், மே 30 - அரியலூர் மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை ( 31.05. 2026 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 0500 மணியளவில் அரியலூர் புறவழிச் சாலையில் உள்ள ரிதன்யா மஹாலில் கழக சட்டத்திட்ட திருத்தக் குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா!

2, கழக ஆக்கப் பணிகள்.

அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### அவசர சிகிச்சைக்காக

# உதவி எண் 112-ஐ 3 மாதங்களுக்குள் செயல்படுத்த வேண்டும்!

## அனைத்து மாநிலங்களுக்கும் உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, மே 30- நாடு முழுவதும் அவசர கால சிகிச்சைக்காக 112 என்ற பொதுவான உதவி எண்ணை 3 மாதங்களுக்குள் செயல்படுத்துவதற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சாலை பாதுகாப்பை மேம்படுத்தவும், சாலை விபத்துகளின் போது அவசர விபத்து சிகிச்சை என அழைக்கப்படும் அவசர மருத்துவ சிகிச்சையை வழங்கவும் கோரி, ‘சேவ் லைப் பவுண்டேஷன்’ என்ற அமைப்பு உச்சநீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தது. இந்த ரிட் மனுவை, நீதிபதிகள் ஜே.கே. மகேஸ்வரி மற்றும் அதுல் எஸ். சந்தூர்கர் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து தீர்ப்பளித்தது.

தீர்ப்பில் நீதிபதிகள் கூறியதாவது: சாலை விபத்து வழக்குகளில் விரைவாகச் செயல்பட வேண்டியதன் அவசியம், சட்ட நடவடிக்கைகளில் சிக்கிக்கொள்வோமோ என்ற அச்சத்தில் ஒரு சாமானிய மனிதன் அவசர சேவைகளை அழைக்கத் தயங்குவது போன்ற பல்வேறு காரணிகளை நீதிமன்றம் கவனத்தில் கொண்டது. இந்த தடைகளைச் சமாளிக்க, காய சிகிச்சைக்கான ஒரு சீரான கட்டமைப்பை உருவாக்குதல், பொது விழிப்புணர்வை ஏற்படுத்துதல், முதலுதவித் திறன்களைத் தரப்படுத்துதல் மற்றும் முறையான நல்லெண்ணம் கொண்டவர்கள் சட்டங்கள் (குட்சமரிட்டான்) தேவைப்படுகின்றன.

குடிமக்களின் காய சிகிச்சைக்கான உரிமை என்பது இந்திய அரசியலமைப்பின் 21வது பிரிவின் கீழ் பொறிக்கப்பட்டுள்ள வாழ்வதற்கான உரிமையின் ஒரு பகுதியாகும். அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களும் பல்வேறு எண்களில் செயல்படும் அவசர உதவி எண்களையும் ஒருங்கிணைத்து பொதுவான அவசர உதவி எண் 112 ஐ மூன்று மாதங்களுக்குள் செயல்படுத்த வேண்டும்.

அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களும், மூன்று மாதங்களுக்குள், மாநில மற்றும் மாவட்ட அளவில் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகளுடன், செயல்படும் நல்லெண்ணம் கொண்டவர்களின் குறைதீர்ப்பு அமைப்புகளை நிறுவ வேண்டும் என்பது உள்பட பல்வேறு வழிக்காட்டுதல்களை வழங்கியுள்ளது.

### 2024-25ஆம் நிதியாண்டில்

# மாநில கட்சிகளின் வருவாய் 52% சரிவு!

## வரவை விட அதிகமாக செலவிட்ட 21 கட்சிகள்!

புதுடெல்லி, மே 30- தன்னார்வ அமைப்பான ஜனநாயக சீர்த்திருத்தங்களுக்கான சங்கம் (ஏடிஆர்) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நாடு முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட 67 மாநில கட்சிகளில் 36 கட்சிகளின் 2024-25ம் நிதியாண்டிற்கான வருடாந்திர வரவு செலவு தணிக்கை அறிக்கைகள் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள 31 கட்சிகள் தணிக்கை அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவான 2025 அக்டோபர் 31ம் தேதிக்குப் பிறகும், 207 நாட்கள் கடந்த நிலையிலும் இன்னும் வெளியிடவில்லை.

இந்த தணிக்கை அறிக்கைகளின்படி, 2024-25ம் நிதியாண்டில் 36 மாநில கட்சிகளின் மொத்த வருவாய் ரூ.1,192.94 கோடியாக பதிவாகி உள்ளது. இது 2023-24ம் நிதியாண்டில் கிடைத்த ரூ.2,463.17 கோடியை விட ரூ.1,270.23 கோடி (51.57 சதவீதம்) குறைவாகும். ஆனாலும் இந்த கட்சிகள் அறிவித்த மொத்த செலவினம் ரூ.1,433.07 கோடி. இது மொத்த வருவாயை விட ரூ.240.12 கோடி (20 சதவீதம்) அதிகமாகும்.

இந்த பட்டியலில் முதல் 5 இடங்களை பிடித்த கட்சிகள் மட்டுமே மொத்த வருவாயில் சுமார் 69 சதவீதத்தையும், மொத்த செலவினத்தில் 77 சதவீதத்தையும் கொண்டுள்ளன. அதிகபட்சமாக தெலுங்கு தேசம் கட்சி ரூ.228.31 கோடியை வருவாயாக அறிவித்துள்ளது. திரிணாமுல் காங்கிரஸ் ரூ.219.35 கோடி, ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ரூ.140.39 கோடியுடன் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. செலவினங்களை பொறுத்த வரை, அதிகபட்சமாக ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ரூ.340.20 கோடியை செலவிட்டுள்ளது.

பிஜு ஜனதா தளம் ரூ.288.44, திரிணாமுல் காங்கிரஸ் ரூ.227.59 கோடியை செலவிட்டுள்ளன. 36 கட்சிகளில் 21 கட்சிகள் தாங்கள் ஈட்டிய வருவாயை விட அதிகமான தொகையை செலவிட்டுள்ளதாக கூறி உள்ளன. அதிகபட்சமாக ஒய்.எஸ்.ஆர்.காங்கிரஸ் வருவாயை விட ரூ.199.82 கோடியை அதிகமாக செலவிட்டுள்ளது. திரிணாமுல் காங்கிரஸ், பி.ஆர்.எஸ், பிஜு ஜனதா தளம், ஐக்கிய ஜனதா தளம், சமாஜ்வாடி ஆகிய கட்சிகளும் வருவாயை விட அதிகமாக செலவிட்டுள்ளன.

**மிச்சம் பிடித்த கட்சிகள்**

36 கட்சிகளில் 15 கட்சிகள் தங்கள் வருவாயில் மிச்சம்பிடித்து குறிப்பிட்ட தொகையை கையிருப்பில் வைத்திருப்பதாக தெரிவித்துள்ளன. அதில் முதலி டத்தில் உள்ள தெலுங்கு தேசம் கட்சி ரூ.166.98 கோடியை கையிருப்பில் வைத்துள்ளது. மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா ரூ.36.27 கோடியையும், அ.தி.மு.க. ரூ.35.86 கோடியையும் மிச்சம்பிடித்து வைத்துள்ளன.

**தேர்தலுக்கே அதிக செலவு**

மாநில கட்சிகளுக்கு நிதி திரட்டுவதற்கான மிகப்பெரிய ஆதாரமாக தன்னார்வ நன்கொடைகளே தொடர்ந்து இருந்து வருவதாக ஏ.டி.ஆர். அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மொத்த வருவாயில் ரூ.702.36 கோடி (58.88 சதவீதம்) நன்கொடைகள் மூலம் பெறப்பட்டுள்ளன. அதிகபட்சமாக திரிணாமுல் காங்கிரஸ் ரூ.184.08 கோடி நன்கொடை பெற்றதாக தெரிவித்துள்ளது. ஒய்.எஸ்.ஆர். காங். ரூ.140.05 கோடி, தெலுங்கு தேசம் ரூ.85.20 கோடியை நன்கொடையாக பெற்றுள்ளன.

வட்டி வருவாய் மூலம் கூடுதலாக ரூ.277.21 கோடியை இக்கட்சிகள் பெற்றுள்ளன. இது மொத்த வருவாயில் 23.24 சதவீதம். 15 மாநில கட்சிகள் மொத்த செலவினத்தில் 55 சதவீதத்திற்கும் அதிகமான தொகையை தேர்தல் பணிகளுக்காகவே செலவிட்டுள்ளன. தேர்தல் பிரச்சாரங்களுக்காக ஒய்.எஸ்.ஆர். காங். ரூ.299.92 கோடி, பிஜு ஜனதா தளம் ரூ.270.66 கோடி, பி.ஆர்.எஸ். ரூ.147.99 கோடியை செலவிட்டுள்ளன.

### எபோலா வைரசால் பாதிக்கப்பட்டுள்ள

# காங்கோவுக்கு இந்தியா மருத்துவ உதவி!

புதுடெல்லி, மே. 30- எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள காங்கோ நாட்டுக்கு மருந்துகள், கருவிகள் உள்ளிட்டவற்றை இந்தியா அனுப்பியுள்ளது.

காங்கோ ஜனநாயகக் குடியரசு, உகாண்டா உள்ளிட்ட ஆப்பிரிக்க நாடுகளில் எபோலா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் நிலையில், உலகளாவிய சுகாதார நெருக்கடி நிலையை உலகச் சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. காங்கோ நாட்டில் 2018 முதல் 2020 வரை எபோலா வைரஸ் அதிக அளவில் பரவி சுமார் 2,300 பேர் உயிரிழந்தனர்.

விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு எளிதில் பரவக்கூடிய ‘பண்டிபுக்யோ’ என்னும் ஓர் அரிய வகை எபோலா வைரஸ், கடுமையான குருதிப்போக்கு காய்ச்சல் ஏற்படுத்தக்கூடியது என்பதால், தற்போது தீவிரமான நோயாக எபோலா கருதப்படுகிறது.

இந்நிலையில் எபோலா வைரஸ் மீண்டும் பரவி பலர் உயிரிழந்துள்ளனர். இதைத் தொடர்ந்து எபோலாவால் பாதிக்கப்பட்டுள்ள காங்கோ நாட்டுக்குத் தேவையான மருந்துகள், கருவிகள் உள்ளிட்டவற்றை இந்தியா அனுப்பியுள்ளது.

இது தொடர்பாக ஆப்பிரிக்க நோய் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு மையங்கள் (ஆப்பிரிக்கா சிடிசி) வெளியிட்டுள்ள சமூக ஊடகச் செய்தியில் கூறியுள்ளதாவது:

இந்தியா அனுப்பியுள்ள எபோலா வைரஸுக்கான மருந்துகள், மருத்துவக் கருவிகள் உகாண்டாவிலுள்ள மருத்துவ மையத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. அங்கிருந்து ஆப்பிரிக்க நோய் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு மையத்துக்கு இந்த மருந்துகள் விரைவில் வந்து சேரும்.

இங்கிருந்து பாதிக்கப்பட்டுள்ள டிஆர் காங்கோ பகுதிகளுக்கு அவை கொண்டு சேர்க்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும். இந்த இக்கட்டான நேரத்தில் உதவியுள்ள இந்திய அரசுக்கும், இந்திய மக்களுக்கும் ஆப்பிரிக்கா சிடிசி நன்றி தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ‘கியூட்’ இளங்கலை நுழைவுத் தேர்வு மாற்றப்பட்ட தேதி அறிவிப்பு!


புதுடெல்லி, மே 30- நாடு முழுவதும் உள்ள மத்திய, மாநில மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்களில் இளநிலை படிப்பில் சேருவதற்கான கியூட் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 2026ம் ஆண்டுக்கான கியூட் தேர்வு கடந்த 11ம் தேதி தொடங்கி 31ம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் 28ம் தேதியான நேற்று முன்தினம் பக்ரீத் பண்டிகை என்பதால் அன்று நடைபெற இருந்த தேர்வு தேதி தள்ளிவைக்கப்பட்டது.

இந்நிலையில் தேசிய தேர்வு முகமையானது மாற்றப்பட்ட தேதியை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. இதன்படி, மே 31ம் தேதி, ஜூன் 6, ஜூன் 7 ஆகிய தேதிகளில் தேர்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மே 31ம் தேதி தேர்வில் பங்கேற்கும் மாணவர்களுக்கான நுழைவுச்சீட்டு வெளியிடப்பட்டுவிட்டதாகவும் அவற்றை cuet.nta.nic,in என்ற அதிகாரப்பூர்வ இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது. ஜூன் 6 மற்றும் 7ம் தேதிகளில் நடைபெறும் தேர்வுகளுக்கான நுழைவுச்சீட்டுகள் விரைவில் வெளியிடப்படும் என்று தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு. அரங்கநாதன்

மே 30 (2004)



திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலம் தொட்டு கழகப் பணியாற்றியவர்.

திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றவர்.

விலைவாசிப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.